அசல் வழக்கு எண்.271/2023

**PW**.2 - திரு. மதியழகன்

நாள். 08.07.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணை வாதி தரப்பு வழக்கறிஞரிடம் உள்ளது. நான் வாதியின் வழக்கறிஞர் சொன்னதின் பேரில் தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு அடமானம் சம்பந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அந்த சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. ஆனால் அந்த சொத்து அமைந்திருக்கும் இடம் தெரியும். இறந்துபோன அல்லிக்கொடி, வாதிக்கு வட்டி பணம் செலுத்தி வந்தார் என்றால் செலுத்தவில்லை. அல்லிக்கொடி வட்டிக்கு பணம் செலுத்தவில்லை என்ற விவரம் எனக்கு வாதி சொல்லி தெரியும். மேற்படி மின்னல்கொடி உண்மை அல்லது பொய் என்னிடம் அது குறித்து சொல்லியிருக்கலாம் என்றால் சரியல்ல. ஆனால் அவர் உண்மையை தான் சொல்லியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆனால் அதில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. அல்லிக்கொடி, வாதிக்கு வட்டி பணம் செலுத்தினார் என்றும், ஆனால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கின் சங்கதிகள் தெரியாது என்றும், அல்லிக்கொடி மற்றும் வாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றியும் எனக்கு தெரியாது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- மதியழகன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.08 18:59:36 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.